யா/ஏழாலை வடக்கு
அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

# பரிசளிப்பு விழா – 2010
# Prize Giving - 2010

# அதிபர் அறிக்கை
# Principal's Report

10.10.2010

# யா/ஏழாலை வடக்கு
# அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

## மகுட வாசகம்

# கற்றனைத்தூறும் அறிவு

## தூர நோக்கு
## (Vision)

கற்றல் - கற்பித்தல் செயலாற்றுகை மூலமாக மாறி வரும் உலகுக்குப் பொருத்தமானதும், சவால்களை எதிர் கொள்ளக் கூடியதும், பண்பாட்டைப் பேணுவதுமான நற் பிரசைகளை உருவாக்குவோம்.

## பணிக்கூற்று
## (Mission)

எமது பாடசாலையின் பாரம்பரியமான சாதனைகள் தற்போதைய வினையாற்றல் திறன்களினூடாக, முறைசார், முறைசாரா, முறையில் கல்வி மூலம் மாணவர்களுக்கு கல்வி - தொழில் தேர்ச்சிகளை வழங்குதல் அவர்களைத் தேசக் கட்டுமானத்தில் உண்மையான பங்காளராக்கி வீடு, பாடசாலை, நாட்டுப்பற்றுடன் செயலாற்றக்கூடிய கல்விச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

## யா/ஏழாலை வடக்கு
## அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

# வருடாந்த பரிசளிப்புவிழா
# 2010

காலம்: 10.10.10 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
இடம்: பாடசாலை மண்டபம்
தலைவர்: திரு.த.வாமதேவன் (அதிபர்)

*பிரதம விருந்தினர்*

**பேராசிரியர் மா.சின்னத்தம்பி**
(கல்வியியல் பேராசிரியர், தலைவர், சட்டத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

*சிறப்பு விருந்தினர்கள்*

**திருமிகு செ.குபேரநாதன்** (SLEAS)
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)

**திருமிகு S.B.அரசகுமார்**
(சிரேஷ்ட முகாமையாளர், மேற்தரக்கிளை இலங்கை வங்கி, சுன்னாகம்)

*தங்கள் வரவு எம்மை மகிழ்விக்கும்*

ஏழாலை வடக்கு

**பாடசாலைச் சமூகம்**

# நிகழ்ச்சி நிரல்

விருந்தினர்களை அழைத்து வரல்

மங்கல விளக்கேற்றல்

தேவாரம்

கிறிஸ்தவ கீதம்

தேசிய கொடியேற்றல் - தேசிய கீதம்

பாடசாலைக் கொடியேற்றல் - பாடசாலைக் கீதம்

பாடசாலைக் கீதம்

வரவேற்புரை

ஆசியுரை

தலைமையுரை

சிறப்பு விருந்தினர் உரை

பிரதம விருந்தினர் உரை

பரிசில்கள் வழங்கல்

நன்றியுரை

கலைநிகழ்வுகள்

கொடி இறக்குதல்

# பாடசாலைச் சின்னம்



## பாடசாலைத் தகவல்கள்

| | |
|---|---|
| பாடசாலை ஆரம்பம் | 11.10.1888 |
| பாடசாலை இலக்கம் | 1010015 |
| தொகை மதிப்பு | 09191 |
| பரீட்சை இல | 11076 |
| தேர்தல் தொகுதி | மானிப்பாய் |
| பிரதேச செயலாளர் | பிரிவுவலிதெற்கு. உடுவில் |
| கிராமசேவையாளர் | பிரிவு ஏழாலை வடக்கு J/205 |
| தரம் | III |
| வகுப்புக்கள் | 1 - 5 வரை |
| காணி | 4 பரப்பு 3குளி |
| கட்டடம் | 90 x 20(10x20 அலுவலகம்) |

மின்வசதி உண்டு

குடிநீர் வசதி (நீர்த்தாங்கி)

10.04.1963ம் ஆண்டு வர்த்தமானிப் பிரகாரம் பாடசாலை அரசாங்கத்தால் சவீகரிக்கப்பட்டது.

இடம் பெயர்ந்தது :07.01.1991

(யா/ ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலையில் இயங்கியது)

மீளத் திறக்கப்பட்டது :14.02.2003

கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பம் :01.01.2004

பாடசாலை கணக்கெடுப்பு 01.06 - 31.05 வரை

## எமது பாடசாலையின் ஆளணியினர்



## தற்போதைய ஆசிரியர் குழாம்

திரு.த.வாமதேவன் (அதிபர்)

திரு.செ.யூட்ரவிநாத்

திருமதி கலைவாணி நகுலேஸ்வரன்

திருமதி பற்றிமாமலர் அன்ரன் ஜோர்ச் விக்னராசா

செல்வி சுஜிதா தர்மலிங்கம் (தொண்டர் ஆசிரியர்)

செல்வி தயாளினி சந்திரமோகன் (தொண்டர் ஆசிரியர்)

## அதிபர் வரிசை

திரு.சீனிவாசகம் (சீனிச்சட்டம்பியார்)

திரு.கார்த்திகேசு 1931

திரு.தம்பிஐயா 1967 - 1968

திருவயித்திலிங்கம் 1949

திரு.செல்லையா 1965

திரு.விஜயரட்ணம் 1970

திரு.சின்னத்துரை

திரு.சரவணமுத்து

திரு.செ.சோமலிங்கம்

திரு.சூசைப்பிள்ளை

திரு.யோகர் (1976-1993)

திரு.திரு பொன்னம்பலம் (1993-1995)

## கற்பித்த ஆசிரியர்கள்

திரு.செல்லம் 1940

திரு.இராசா 1931

திரு.ஞானம் 1931

திரு.செல்லப்பா இரத்தினம் 1940

திரு.அம்பலம் 1931

திருமதி எம். மனோன்மணி 1948

திரு.திசநாயகம் 1932

திருமதி பாக்கியம் இராசதுரை 1957

திரு.சூசைதாஸ் 1965

திரு.கந்தையா 1950
.திருமதி ப.இராசையா
திரு.வசந்தராசபிள்ளை 1965
திருமதி சகுந்தலா 1965
திருமதி முத்துச்சாமி செல்லம்மா
1973
பண்டிதர் பொன்னுத்துரை 1948
திரு.திருநாவுக்கரசு (நாவேந்தன்)
திரு.வி.முருகேசு
திருமதி இராசசிங்கம் இராசமணி
திருமதி தேவராசா புஸ்பராணி
திருமதி சுகிர்தம் தயானந்தம்
திருமதி ஞானதீபம் அருட்பிரகாசம்
திருமதி லில்லி மலர் சண்முகநாதன்
திருமதிநாகம்மா யோகர்
திரு. அ.அருட்பிரகாசம்
திரு.த கந்தசாமி
திருமதி அன்னலட்சுமி பொன்னுச்சாமி
திருமதி குலமணி பொன்னுத்துரை
திருமதி இரஞ்சிதம் சுவாமிநாதன்
திரு.ஏ.சின்னத்தம்பி
திரு.ரி.பொன்னையா
திருமதி தவமணி சின்த்தம்பி
திரு.க.அப்புத்துரை
திரு.கார்த்திகேசு

திரு.கதிராசிப்பிள்ளை
திரு.செ.இரத்தினம்
திருமதி றோஸ் செபரத்தினம்
திரு.ரி.கந்தையா
திரு.எஸ் இரத்தினம்
திரு.எஸ்.ஆர்.இரத்தினசிங்கம்
1943- 1958
திரு.வி.எஸ்வைரமுத்து
திருமதி கே.அன்னதானம்
திரு.ஜோன்.துரைராசா 1993
திரு.தி.இரவீந்திரநாதன்
திருமதி T.உருத்திரலிங்கம்
திருமதி பா.சிவராசசிங்கம்
திருமதி கொ.தேவதாசன்
திரு.N.கணேசராசா
திரு.பொ.பாலநாதன்
திருமதி எ.பரமானந்தம்
திருமதி L.G.சண்முகநாதன்
திருமதி M.S.தயானந்தன்
திருமதி V.கந்தசாமி
செல்வி R.இராசலிங்கம்
திரு. K.சின்னப்பா
திரு.கே.இராசேந்திரம்
திரு.ச.பொன்னம்பலம்
திருமதி கு.பொன்னுத்துரை

## யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு **(குறள் 1)**

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடி சேராதார் **(குறள் 10)**

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு **(குறள் 299)**

நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன்
உண்மை அறிவே மிகும் **(குறள் 373)**

கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக **(குறள்391)**

எண்என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு **(குறள் 392)**

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் ஊறும் அறிவு **(குறள் 396)**

**(திங்கள், புதன், வியாழன் நாட்களில் காலை வேளையில் மாணவர்களால் இசைக்கப் பெறுகின்றது.)**

# அதிபர் அறிக்கை

இன்றைய எமது பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பேராசிரியர் மா. சின்னத்தம்பி கல்வியியல்பேராசிரியர், தலைவர் சட்டத்துறை யாழ் பல்கலைக்கழகம் அவர்களே, சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.செ. குபேரநாதன் அவர்களே, இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக்கிளை முகாமையாளர் திரு. S.B அரசகுமார் அவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, பாடசாலை நலனில் அக்கறை கொண்டுள்ள பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, ஆசிரியர்களே, மாணவர்களே அனைவருக்கும் எனது காலை வணக்கம்.

இன்றையதினம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பேராசிரியர் ம.சின்னத்தம்பி அவர்கள் படிப்படியாக கல்வியில் உயர்ந்து இன்று கல்வியியல் பேராசிரியராக மிளிர்கின்றார். பொருளியல் சிறப்புப்பட்டமும், பொருளியல் தத்துவமாணி, கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா, பொருளியல் முதுகலைமாணி, கல்வியியல் முது தத்துவமாணி ஆகிய பட்டங்களைப்பெற்று கல்வியில் உயர்ந்தவர்.

பட்டங்களுடன்நின்றுவிடாது அறிவார்ந்த 40 ற்கும் அதிகமான கல்வியியல்கட்டுரைகளை எழுதியதுடன் 30ற்கும் அதிகமான பொருளியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.அத்துடன் கல்வியியல்தொடர்பான, பொருளியல் தொடர்பான நூல்களையும் எழுதியுள்ளார். அப்படிப்பட்ட பெருமகனார்இவ்விழாவில் கலந்து சிறப்பிப்பதையிட்டு பெருமகிழ்வடைவதுடன்அவர் கைகளால் பரிசு பெறும் மாணவ மாணவிகள் பெரும்பாக்கியசாலிகள்.

அடுத்து சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிப்பவர் திரு.செ.குபேரநாதன் அவர்கள். ஆசிரியராகப் பணியைத் தொடங்கி பாடசாலைகளில் பல்வேறு பதவிகளை வகித்து போட்டிப்பரீட்சை மூலம்

அதிபராக பதவியுயர்வு பெற்று பின்னர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றார். அண்மையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டு அதனால் அவரது சேவை உயர்வாக்கப்பட்டுள்ளது. எமது பாடசாலையின் தேவைகளை அறிந்து அவ்வப்போது உதவிகளை வழங்கி வருகின்றார். அவர் இன்றைய விழாவில் கலந்து சிறப்பிப்பது பெருமைக்குரியதே.

அடுத்து சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி மேற்தரக்கிளை முகாமையாளர் திரு.எஸ்.பி.அரசகுமார் அவர்கள். அவர் படிப்படியாக பதவியுயர்வு பெற்று இன்று சிரேஷ்ட முகாமையாளராகப் பணியாற்றுபவர். வங்கியில் வாடிக்கையாளரது நிலையறிந்து அவரவர்க்கு ஏற்ப உரையாடி வாடிக்கையாளரைக் கவர்கின்ற ஆற்றல் உடையவர். அத்துடன் வங்கியையும் கவர்ச்சியுடையதாக்கி பணியாற்றுகின்ற உத்தியோகஸ்தர்களையும் நவீன முகாமைத்துவ நுட்பங்களுக்கு ஊடாக ஊக்குவித்து சிறப்பான பணியாற்றும் முகாமையாளர் அவர்கள் இங்கு வருகை தந்திருப்பது மகிழ்விற்குரியதே.

எமது பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டு 122 ஆண்டுகளை நாளை நிறைவு செய்யவுள்ளது. அமெரிக்கன் மிசனறிமாரால் 1888ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கி வந்தது. 1990 களில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து ஏழாலை இசிதோர் றோ.க.த.க பாடசாலையில் இயங் கியது. பின்னர் 1995ல் மூடப்பட்டது.

2002ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பின் 2003 ம் ஆண்டு கட்டடம் கட்டப்பட்டு 2004ல் தரம் 01 ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ந்து முதலாவது 5ம் ஆண்டு 2008ல் தரம் 05 புலமைப்பரிசிலைச் சந்தித்தது. 10 மாணவர்கள் தோற்றி இரண்டு மாணவர்கள் சித்தி பெற்றனர். அந்த ஆண்டு கோட்டமட்டத்தில் 11 வயதின் கீழ் ஆண்க

ளுக்கான சிறந்த வீரர் எமது பாடசாலை மாணவன் செல்வன் வி. பிரண வன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அதே மாணவன் வலய மட்டத் தில் பங்குபற்றி 2ம் இடத்தினை 100m, 75m, பெற்று மாவட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இச்சாதனை தொடரவேண்டும் என வேண்டுகின்றேன்.

2009ம் ஆண்டு ஆறு மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி ஒருவர் சித்தி பெற்றார். எமது மாணவி ஒருவர் வன்னியில் சென்று பரீட்சைக்கு தோற்றி சித்தி பெற்றார்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

மாணவர்களின் பெற்றோர், நலன்விரும்பிகள், பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிகின்றனர். இணைப்பாடச் செயற்பாடு, மதிப்பீட்டறை, பங்களிப்பு அதிகம். நேரம், காலம் பாராது பாடசாலையின் முழுச் செயற்பாட்டிற்கும் ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இதன் செயலாளராக , 2010 திரு.க.நித்தியானந்தம் அவர் கள் கடமையாற்றுகின்றார்.

## மாணவர் மன்றம்

இதற்கு திருமதி கலைவாணி நகுலேஸ்வரன் பொறுப்ாக செயற்படுகின்றார். இவர்கள் மாதாந்தம் இரு தடவை நிகழ்வுகளை சிறப்பாக மேற் கொள்கின்றனர். இதனூடாக மாணவர்கள் தமது ஆற்றல்கள், திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். 2009க்கு தலைவராக செல்வி ப. கிருத்திகாவும், செயலாளராக செல்வன் தேனுசனும், 2010க்கு தலைவராக செல்வன் சு.துஜிதனும், செயலாளராக செல்வன் ச.மதுசூதனனும் இயங்கி வருகின்றனர்.

## கட்டாயக் கல்விக்குழு

எமது பாடசாலையில் கட்டாயக் கல்விக்குழு நல்ல முறையில் இயங்கி வருகின்றது. வரவு குறைந்த மாணவரை இனங்கண்டு

ஒழுங்கான வரவைப் பேணி வருகிறது. இதற்கு திரு. யூட்ரவிநாத் அவர்கள் பொறுப்பாக செயற்படுகின்றார்.

## இடை வேளை உணவு (MMM)

மாணவர்களுக்கான உணவுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உலக உணவுத்திட்டம் (WEP) வழங்கி வருகிறது. கல்வி அமைச்சு பச்சை மரக்கறிக்குரிய கொடுப்பனவையும் வழங்குகிறது. மரக்கறி விறகுத் தேவையை பெற்றோர் நிவர்த்தி செய்கின்றனர். இதன் பொறுப்பாசிரியராக திருமதி க. நகுலேஸ்வரன் அவர்கள் செயற்படுகின்றார்.

## நியமனம் பெற்றவர்

திருமதி பற்றிமா மலர் அன்ரன் ஜோர்ச் விக்னராசா அவர்கள் யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார். அவர்களை பாடசாலைச் சமூகம் சார்பில் வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

## இடமாற்றம் பெற்றவர்

திரு. பரமலிங்கம் அருமைநாதன் எமது பாடசாலையில் இருந்து யா/புதுமடம் றோ.க.த.க பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவரது சிறப்பான சேவைக்கு நன்றி கூறி சென்ற இடத்தில் சிறப்பான சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

## பௌதீகவளம்

2003ம் ஆண்டு GTZ IS அலகினால் 40 X 20 அடியுள்ள மண்டபமும், 10 X 20 அடியுள்ள அலுவலகமும் அதே காலப்பகுதியில் யுனிசெவ் அமைப்பால் தண்ணீர்தாங்கியொன்றும் அமைத்துத் தரப்பட்டது.

2006ல் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராசா அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ரூபா 50,000/= ற்கு கிணறு திருத்தித்தரப்பட்டது. 2006ல் சிறுவர் பாதுகாப்பினால் 20 X 20 அடி கொண்ட இரு வகுப்பறைகள் அமைத்துத் தரப்பட்டது.

அதற்குரிய ஆசிரியருக்கான மேசைகள், கதிரைகள், மாணவர்களுக்கான மேசைகள், கதிரைகள், வகுப்பறை மறைப்புகள், கரும்பலகைகள் என்பவற்றையும் தந்துதவியுள்ளார்.

2007 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ. சேனாதிராசா அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ரூபா ஒரு லட்சம் கிடைத்தது. அதற்கு உருக்கு அலுமாரிகள் ஐந்தும், புத்தகத்தட்டு, அலுவலக கதிரை, ஆசிரியர் மேசைகள், கதிரைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டது.

2009ம் ஆண்டு யுனிசெவ் அமைப்பினால் ஆண், பெண் மலசல கூடங்கள் கட்டித்தரப்பட்டது. இதே ஆண்டு உலக உணவுத்திட்டத்தினால் சமையல் கூடம் அமைத்துத் தரப்பட்டது. அத்தோடு செலிங்கோ லைவ் நிறுவன த்தினால் 20 X 20 வகுப்பறை அமைத்து தரப்பட்டது.

2010ல் யுனிசெவ் அமைப்பினால் சிறுவர் விளையாட்டு முற்றம் அமைத்துத் தரப்பட்டது.

2008ல் இல் தென்னிந்திய திருச்சபை பேராயர் அதி வண. கலா நிதி டானியல் தியாகராஜாஅவர்களினால் கணனித்தொகுதியொன்று வழங்கப்பட்டது. அத்துடன் வருடாவருடம் ஒளி விழாவுக்குரிய செலவினையும் அவர்களே வழங்கி வருகின்றார்கள்.

## விளையாட்டு விழா

இது வருடாவருடம் பெப்ரவரி மாதத்தில் சிறப்பாக மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இதன் செயலாளராக திரு.செ.யூட்ரவிநாத் பொறுப்பாளராக செயற்படுகின்றார். மாணவர்கள் பாடசாலை மட்டம், குடும்பமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

## இந்து மாமன்றம்

இம் மன்றமானது பொங்கல் விழா, சித்திரைப்புத்தாண்டு, நவராத்திரி விழா என்பவற்றை வருடாவருடம் சிறப்பாக செய்து வருகின்றனர். இதன் பொறுப்பாசிரியராக திருமதி கலைவாணி நகுலேஸ்வரன் செயற்பட்டு வருகின்றார்.

## கிறிஸ்தவ மன்றம்

இம் மன்றமானது வருடா வருடம் ஒளி விழாவினை சிறப்பாக கொண்டாடுகின்றனர். 120 வது ஆண்டு சிறப்பு விழாவாக ஏழாலை இரட்சணியசேனை ஆலயத்திலிருந்து பைபிள் (Bible), யேசு பாலகனின் சொரூபம் ஏந்திட பிரமுகர்கள் கரங்களில் மெழுகுவர்த்தி ஒளிர்ந்திட மாணவர்களின் பான்ட் வாத்திய ஒலி முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கொண்டாடப்பட்டது.

## விசேட கல்வி

இதற்கு பொறுப்பாசிரியராக முன்னர் திரு.ப.அருமைநாதன் அவர்கள் செயற்பட்டு வந்தார். அவரது இட மாற்றத்தின் பின் அவருக்கு பதிலாக வருகை தந்த திருமதி பற்றிமா மலர் அன்ரன்ஜோர்ச் விக்னராசா அவர்கள் தற்போது சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்.

## தொண்டர் ஆசிரியர்

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் மாணவர் தொகைக்கேற்ற ஆளணியினர் இருந்த போதும் வகுப்புக்களுக்கு பற்றாக்குறை காரணமாக 2005இலிருந்து செல்வி சுஜிதா தர்மலிங்கம் அவர்களும், 2010 லிருந்து செல்வி தயாளினி சந்திரமோகன் அவர்களும், எம்முடன் இணைந்து சிறப்பாக சேவையாற்றுகின்றனர்.

## தற்காலிக இணைப்பு

திருமதி சுஜந்தினி குருபரன் 26.03.2007 தொடக்கம் 03.11.2008 வரை எமது பாடசாலையில் இணைந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டு பின்னர் யா/ இராமநாதன் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். சென்ற இடத்தில் இவரது சேவை சிறக்க எனது வாழ்த்துக்கள்.

திருமதி கௌசல்யா சிவசுதன் 02.01.2008 முதல் 01.03.2010 வரை சிறப்பாக கடமையாற்றியுள்ளார். எமது பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் குறிப்பாக விளையாட்டுப் போட்டிகளில், சிறப்பாக பணியாற்றி சொந்தப் பாடசாலைக்கு சென்றுள்ள அவரது சேவை சிறக்க எமது வாழ்த்துக்கள்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**2009**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.த.வாமதேவன் |
| செயலாளர் | : | திரு.க.நித்தியானந்தம் |
| பொருளாளர் | : | திரு.செ.யூட்ரவிநாத் |

### நிர்வாக சபை உறுப்பினர்

1. திருமதி உமா செல்வராசா
2. திருமதி ரூபிகா சிறீரஞ்சன்

3. திருமதி சசிகலா லட்சுமணன்
4. திரு. நாகமணி.செல்வராசா
5. திருமதி சுதர்சினி உதயகுமார்
6. திருமதி செல்வரதி பாலசிங்கம்

**2010**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.த.வாமதேவன் |
| செயலாளர் | : | திரு.க.நித்தியானந்தம் |
| பொருளாளர் | : | திரு.செ.யூட்ரவிநாத் |

**நிர்வாக சபை உறுப்பினர்**

1. திருமதி செல்வரதி பாலசிங்கம்
2. திருமதி தமிழ்வாணி மயூரன்
3. திரு. நாகமணிசெல்வராசா
4. திரு.த.மோகனராசா
5. திருமதி உமா செல்வராசா
6. திருமதி சுதர்சினி உதயகுமார்

## பாடசாலை அபிவிருத்திக் குழு

| | |
|---|---|
| தலைவர் | : திரு.த.வாமதேவன் |
| உப தலைவர் | : திரு.செ.யூட்ரவிநாத் |
| திணைக்கள பிரதி நிதி | : திரு. மு.நடராசா<br>உதவிக்கல்விப் பணிப்பாளர் – உடற்கல்வி |
| செயலாளர் | : திரு.பா.திருமாறன் |

**நிர்வாகக்குழு**

1. திருமதி க.நகுலேஸ்வரன் (ஆசிரியர்)
2. திரு.க. நித்தியானந்தம் (பெற்றார்)
3. திருமதி சிவரதி பாலசிங்கம் (பெற்றார்)
4. திருமதி சிவமலர் இராசிறி (பெற்றார்)

## தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு

திருமதி ரஜனி சுதாகரன் (பழைய மாணவர்)
செல்வி தர்மலிங்கம் சுஜிதா (பழைய மாணவர்)
திருமதி விக்னராசா பற்றிமாமலர் அன்ரன் ஜோர்ச்
திரு.சி.கந்தசாமி
திருமதி சுதர்சினி உதயகுமார்

**மாணவத் தலைவர்கள்**

செல்வன் சு.துஜிதன்
செல்வி ச.சசிகலா

**வகுப்பு தலைவர்கள்**

தரம் 01 – செல்வன் வி.விதுசன்
– செல்வி ம.சதுர்சனா
தரம் 02 – செல்வன் ம.கபிலாஷ்
செல்வி உ.அனிதா
தரம் 03 – செல்வன் கே.கேஸ்டியன்
செல்வி வி.யாதவி
தரம் 04 – செல்வன் ம.கஜவண்ணன்
செல்வி இ.வினிதா
தரம் 05 – செல்வன் ச.மதுசூதனன்
செல்வி செ.கலக்சி

## பெண்சாரணியம்

எமது பாடசாலையில் சிறுவர்களின் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட அமைப்பானது 22.02.2010 முதல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது. இதன் மூலம் சிறுமியர்களுக்கு சமூக தொடர் பாடல்கள் ஏற்படுத்தப்பட்டு எதிர்காலத்தில் நல்ல பிரசைகளாக உருவாக வழிகாட்டியாக இவ் அமைப்பு உதவுகிறது.

இதன் பொறுப்பாசிரியராக திருமதி கலைவாணி நகுலேஸ்வரன் செயற்படுகின்றார். பாடசாலையைச் சுற்றி பாதுகாப்பு மதில் அமைந்தால் பாடசாலை சொத்துக்களை பாதுகாக்க முடிவதுடன் கவின் நிலையையும் பேணக்கூடியதாக இருக்கும்.

## நன்றிக்குரியவர்கள்

இன்றைய நாளில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையின் தலைவரும், கல்வியியல் பேராசிரியருமான மா. சின்னத்தம்பி அவர்களுக்கும், சிறப்பு விருந்தி னர்களாக கலந்து சிறப்பித்து உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.குபேரநாதன் அவர்களுக்கும், இலங்கை வங்கி மேற்தரக்கிளையின் முகாமையாளர் திரு. S.B அரசகுமார் அவர்களுக்கும் எமது நன்றிகள். அத்துடன் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், மதகுருமார் அனைவருக்கும் நன்றிகள்.

மற்றும் இப்பரிசளிப்பு விழாவிற்குரிய நிதியினைத் தந்துதவியவர்களுக்கும், மதிய விருந்துக்குரிய நிதியினை தந்துதவியவர்களுக்கும் இலங்கை வங்கி சுன்னாகத்திற்கும். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியினருக்கும் எமது அயலில் உள்ள நிதி வழங்கிய பெரியவர்களுக்கும் இந்தவேளை நன்றிகள்.

எமது கிராம அலுவலர் திரு.க.சிவானந்தம் அவர்களுக்கும் இவ்வேளையில் நன்றிகள். எமது பாடசாலை எப்போதும் அழகாக காட்சியளிப்பதற்கு தோன்றாத் துணையாக இருந்து செயற்பட்டு வருபவர் அவருக்கு பதிற்கடமை ஆற்றுகின்ற செல்வி செ.சசிகலா அவர்களுக்கும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.K.சிவரூபன் மற்றும் எமது பிரதேச தபாலதிபர் திருமதி கு.மாலதி அவர்களுக்கும்

மற்றும் இந்த விழா சிறப்பாக நடைபெறுவதற்கு துணைநின்ற எமது ஆசிரியர்களுக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு.க.நித்தியானந்தம் மற்றும் நிதி திரட்டுவதற்கு துணைநின்ற திரு.நா.செல்வராசா தலைமையிலான பெற்றோர்க்கும் இவ்வேளையில் சிறப்பான நன்றிகள்.

மற்றும் இவ்விழாவிற்கு வருகைதந்த அத்தனை பேருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதில் நிறைவடைகின்றேன்.

## பரிசில் பெறுவோர் விபரம்

**தரம் - 01**

01) வி.மதுஷாந் – திருக்குறல் மனனம் (பா.ம 1ம் இடம்) (கு.ம 2ம் இடம்)
கோலம் (கு.ம 1ம் இடம்) பாடங்களில் 1ம் நிலை
நின்று நீளம் பாய்தல் (கோ.ம 1ம் இடம்)

02) வி.யதுஷன் – திருக்குறள் மனனம் (பா.ம 2ம் இடம்)
பாடங்களில் 2ம் நிலை

03) உ.அனிதா – திருக்குறள் மனனம் (பா.ம. 3ம் இடம்)
பாடங்களில் 2ம் நிலை

**தரம் - 02**

04) கே.கேஸ்டிகள்– திருக்குறள் மனனம் (பா.ம 2ம் இடம்)
பாடங்களில் 2ம் நிலை

05) வி.யாதவி – திருக்குறள் மனனம் 2ம் நிலை (பா.ம 1 ம் இடம்)
(கு.ம 3ம் இடம்)
வாய்ப்பாடு மனனம்(கு.ம 2 ம் இடம்)
பாடங்களில் 1ம் நிலை

06) சி.ராதிகா – திருக்குறள் மனனம்(பா.ம 3 ம் இடம்)
குறி பார்த்து எறிதல் (கோ.ம 1 ம் இடம்)
பாடங்களில் 3ம் நிலை

**தரம் - 03**

07) ச.சிவசங்கர் – திருக்குறள் மனனம் (பா.ம 3ம் இடம்)
கோலம் (கு.ம 3ம் இடம்)

08) பா.கிரிசாந் – திருக்குறள் மனனம் (பா.ம 2 ம் இடம்)
வாய்ப்பாடு மனனம்(பா.ம 3 ம் இடம்)

09) இ.விஜிதாஸ் – பாடங்களில் 3ம் நிலை

10) உ.அபிதா – திருக்குறள் மனனம்(பா.ம 1 ம் இடம்),(கு.ம 3 ம் இடம்)
வாய்ப்பாடு மனனம்(பா.ம 1 ம் இடம்),(கு.ம 3ம் இடம்)
பாடங்களில் 2ம் நிலை

11) இ.வினிதா – திருக்குறள் மனனம் (பா.ம 3ம் இடம்)2009
வாய்ப்பாடு மனனம்(பா.ம 2 ம் இடம்)

திருக்குறள் மனனம் (கு.ம 3ம் இடம்)2010
வாய்ப்பாடு மனனம்(கு.ம 3 ம் இடம்)
100 சதுரம் (கு.ம 3 ம் இடம்)
பாடங்களில் 1ம் நிலை

**தரம் - 04**

12) ச.மதுசூதனன் - திருக்குறள் மனனம் (பா.ம 2ம் இடம்)
பொது அறிவு (2010) 3ம்இடம்
பாடங்களில் 3ம் நிலை

13) வ.திருச்செல்வன்- கோலம் (கு.ம 2 ம் இடம்)

14) சி.சாதுரியன் - பேச்சு 2ம் இடம்

15) க.கௌசல்யா - திருக்குறள் மனனம் (பா.ம 1 ம் இடம்)
திருக்குறள் மனனம் (கு.ம 1 ம் இடம்)
திருக்குறள் மனனம் (கோ.ம 5 ம் இடம்)
வாய்ப்பாடு மனனம்(பா.ம 2 ம் இடம்)
பாடங்களில் 2ம் நிலை

16) செ.கலக்சி - திருக்குறள் மனனம் (பா.ம 1 ம் இடம்)
திருக்குறள் மனனம் (கோ.ம 3 ம் இடம்)2010
வாய்ப்பாடு மனனம் (பா.ம 1 ம் இடம்)
இசையும் அசைவும் (கோ.ம 2ம் இடம்)
பாடங்களில் 1ம் நிலை

17) ச.சசிகலா - வாய்ப்பாடு மனனம் (பா.ம 3ம் இடம்)

**தரம் - 05**

18) நி.தேனுசன் - வாய்ப்பாடு மனனம் (பா.ம 1ம் இடம்)
வாய்ப்பாடு மனனம் (கு.ம 2ம் இடம்)
திருக்குறள் மனனம் (கு.ம 1ம் இடம்)
கோலம்( கு.ம 2ம் இடம்)
100 சதுரம்(கு.ம 2ம் இடம் )
பாடங்களில் 1ம் நிலை

19) இ.சிறிதரன் - வாய்ப்பாடு மனனம் (பா.ம 2ம் இடம்)
பாடங்களில் 2ம் நிலை

20) ச.சுயானுஜா – வாய்ப்பாடு மனனம் (பா.ம 3ம் இடம்)
பாடங்களில் 3ம் இடம்

21) ப.கிருத்திகா – உயரம் பாய்தல்(கோ.ம 3ம் இடம்)
பெரிய பந்தெறிதல் (கோ.ம 1ம் இடம்)

**தரம் 01 - 2010**

22) சி.பர்மிளா – திருக்குறள் மனனம் ( 3ம் இடம்)

**மாற்று ஆற்றலுடையோர் விளையாட்டுப்போட்**

23) உ.சங்கீர்த்தனன் – நீளம் பாய்தல் ( 3ம் இடம்)
பந்தெறிதல்( 2ம் இடம் )

24) செ.சுதர்சன் – நீர் உறிஞ்சி அகற்றல் (2ம் இடம்)

**மாற்று ஆற்றலுடையோர் விளையாட்டுப்போட்**

23) உ.சங்கீர்த்தனன் – நீளம் பாய்தல் ( 3ம் இடம்)
பந்தெறிதல்( 2ம் இடம் )

24) செ.சுதர்சன் – நீர் உறிஞ்சி அகற்றல் (2ம் இடம்)
பாடங்களில் 1ம் நிலை

**இலவசப் பாடநூல் பேணியமைக்கான பரிசு**

**தரம் - 01**

01) வி.மதுஷாந்
02) உ.அனிதா
03)வி.யதுசன்

**தரம் - 02**

01) வி.யாதவி
02) கே.கேஸ்டிகன்
03) கி.ராதிகா

**தரம் - 03**

(01) வி.வினிதா
02) உ.அபிதா
03) செ.லக்சன்

**தரம் - 04**

01) செ.கலக்சி

02) க.கௌசல்யா

03) க.மதுசூதனன்

**2009 புலமைப்பரிசில் சித்தி பெற்றோர்**

நி.தேனுசன்

சி.சஜீத்தா

**100க்கு மேல் புள்ளி பெற்றோர்**

இ.சிறிதரன்

ச.சுயானுஜா

**2010ம் ஆண்டு - 100க்கு மேல் புள்ளி பெற்றோர்**

செ.கலக்சி

**பரீட்சைக்கு தோற்றியோர்**

ச.மதுசூதனன்

க.கௌசல்யா

வ.திருச்செல்வம்

சு துஜிதன்

ச.சசிகலா

**வரவு ஒழுங்கு 2009**

தரம் 01 – வி.யதுசன்

தரம் 02 – ம.கஜீபா, ம.தனுஜா

தரம் 03 – உ.அபிதா

தரம் 04 – ச.சசிகலா

தரம் 05 – இ.சிறிதரன், ச.சுயானுஜா–

## 2009இல் கிடைத்த உதவிகள்

- சியோன் தேவாலய பங்குத்தந்தையான வண.யோசுதா தயானந்தம் வில்லியம் அவர்களால் மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

## 2009 தரம் 05ல் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள்

- ச.சுயானுஜா
- ல.டிலக்சனா
- இ.சிறிதரன்
- ம.அனிதா

ஆகியோரால் கோவை வைப்பதற்கு File box வாங்கி தரப்பட்டது.

## 2010இல் கிடைத்த உதவிகள்

- திரு.ராகுல் ராஜரட்ணம் (சுவிஸ்) – 10, 000/=
- திரு.யோ. சத்தியரதன் (கனடா) – 5000/=
- திரு.கதிர்காமு சச்சிதானந்தம் (பிரான்ஸ்) – 5000/=
- திரு.சிதம்பர வரதன் சுபிகா (சுவிஸ்) – 10, 000/=
  (பரிசளிப்பு விழாவிற்கு)
- திரு.நடராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) – 10, 000/=
  (திருமதி நடராசா ஞாபகார்த்தமாக பரிசளிப்பு விழாவிற்குரிய மதிய உணவுக்கு)
- சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழு 5 மாணவர்களுக்கு புத்தகப்பை, கொப்பிகள், பேனை, பென்சில் ஆகியவற்றை வழங்கியுள்ளார்கள்.
  1) ப.ரேணுகா
  2) மு.கலைவாணி
  3) ச.சிவசங்கர்
  4) உ.அபிதா
  5) மோ.டனுசிகன் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது
- இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக்கிளை மாணவர்களுக்கான பரிசுப் பொருட்களை அன்பளிப்பு செய்துள்ளார்கள்.
- தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்பரிசுப்பொருளுக்காக ரூபா 2000/= தந்துதவியுள்ளார்கள்.
- தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் பரிசுப்பொருளுக்காக ரூபா 3000/= தந்துதவியுள்ளார்கள்.

# பரிசளிப்புவிழாவிற்கு அன்பளிப்பு செய்தோர்

| | | |
|---|---|---|
| 01) | செ.கந்தசாமி | 500.00 |
| 02) | திருமதி ம.அன்னலட்சுமி | 1000.00 |
| 03) | திருமதி சுனித்தா சுதாகரன் | 1000.00 |
| 04) | திரு.பொ.மகாலிங்கம் | 500.00 |
| 05) | திரு.உ.ரவிசங்கர் | 500.00 |
| 06) | திரு.சிசிவராஜசிங்கம் | 500.00 |
| 07) | திரு.த.தாரணி | 500.00 |
| 08) | திரு.சிசெல்வராசா | 1000.00 |
| 09) | திரு.ப.சுதாகரன் | 500.00 |
| 10) | திரு.இ.திருமால் | 500.00 |
| 11) | திரு.திருமதி சுவர்ணராஜ் | 500.00 |
| 12) | திரு.கு.குமாரகுலசிங்கம் | 500.00 |
| 13) | திரு.இ.ஞானறஞ்சன் (பவா) | 500.00 |
| 14) | திரு.இ.ஜோன் துரைசிங்கம் | 500.00 |
| 15) | திரு.ந.கரன் | 500.00 |
| 16) | திரு.அ.மாணிக்கவாசகர் | 500.00 |
| 17) | திரு.றீ.றஞ்சன் | 500.00 |
| 18) | திரு.இ.சிவசோதி | 1000.00 |
| 19) | திரு.து.பிரபாகரன் | 1000.00 |
| 20) | திருமதி பார்வதிதேவி | 200.00 |
| 21) | திருமதி சுயந்தினி குருபரன் | 500.00 |
| 22) | திரு.ப.கேதீஸ் | 500.00 |
| 23) | திரு.ம.முருகவேள் | 500.00 |
| 24) | திரு.இ.திருக்குமார் | 500.00 |
| 25) | திரு.க.திருநாவுக்கரசு | 300.00 |
| 26) | க.தம்பிராசா | 300.00 |
| 27) | சு.மனோரதன் | 400.00 |
| 28) | இ.அருணகிரிநாதன் | 200.00 |
| 29) | நா.துரைராசா | 10கி அரிசி |
| 30) | அ.சிறிகுமார் | 500.00 |

# பாடசாலைக் கீதம்

பள்ளியின் பெயரைச் சொல்ல சொல்ல
பரவசம் வந்தெமை ஆளும்
துள்ளியே பயிலும் மாணவர் நாமும்
தொடுவோம் உயர்வினை நாளும்

செந்தமிழ் வல்லார் வாழ்ந்திடும் பூமி
செல்வம் சிறக்கும் செம்மண் பூமி
வந்தநல் வல்லார் அமைத்த ஏழாலை
அமெரிக்கன் பாடசாலை வாழி

கல்வியும் கலையும் இங்கு வளருது
காவலாய் பெரியோர் ஆசியும் பெருகுது
நல்ல இரு மதங்கள் நாளுமே பேணி
நற்பண் பென்றும் வளர்த்தாய் வாழி

வாழிய எங்கள் பாடசாலை
வளம் பல பெற்று வாழியவே
ஆழிசூழ் உலகம் போற்றிட என்றும்
அன்னை வாழி வாழியவே

ஆக்கம்
**கலாபூஷணம் திரு.சு.துரைசிங்கம்**
(கவிஞர் துரையர்)